Registered No. M. 5068.

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1. { சர்வஜித்து-ஷு பங்குனி-மீ 30உ 12—4—1948 ஹிஜிரி 1367 ஜமாதிலாஹர்-மீ 1உ திங்கட்கிழமை. } இதழ் 12

## சர்வதேச சூழ்ச்சிகள்.

"அமைதியைக் காக்க யுத்தம்" இதைத்தான் இன்று அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் கோஷிக்கின்றன. அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமனின் யுத்த பேரிகை முழக்கத்தை யொட்டி உலகமெங்கும் யுத்த முஸ்தீபுகள் ஆரம்பமாய்விட்டன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளைக்கொண்ட யூனியன் அமைந்துவிட்டது. ஐரோப்பாவுக்கு வெளியே குடியேற்ற நாடுகளிலும் இந்த நாடுகள் பொருளாதாரத் துறையில் ஒத்துழைக்கும். அவசர நிலைமையில் கலந்தாலோசித்து யுத்தப் பிரகடனம் செய்ய கவுன்ஸிலும் அமைக்கப்படுகிறது.

ஸ்பெயின், போர்ச்சுகல் இரண்டும் சீக்கிரமே யூனியனில் சேர்ந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குப் பிறகு துருக்கி, கிரீஸ், டென்மார்க், நார்வே, ஸ்வீடன், ஆஸ்டிரியா அநேகமாய் ஸ்விட்ஸர்லாந்தும்கூட அத்துடன் சேர்க்கப்படலாம்.

கம்யூனிஸ்டுகள் இத்தாலிய தேர்தல்களில் வெற்றியடைந்துவிட்டால், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளை, மார்ஷல் திட்டப்படி உதவியளித்து, ரஷ்ய எதிர்ப்பில் ஈடுபடுத்தப்படும் என்று இத்தாலியை பயமுறுத்தப்படுகிறது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளின் யூனியன் அமைப்பாலும் ட்ரூமன் பிரசங்கத்தாலும் பின்லண்டு, செக் நாடுகளின் நிலைமை சாதகமாய் மாறலாம் என்று அமெரிக்க அரசியல் வட்டாரங்களில் நம்பப்படுகிறது. அத்துடன் பாதுகாப்பு கவுன்ஸிலில் செக் பிரச்னை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதால் ரஷ்ய எதிர்ப்பு சக்திகள் செக்கோஸ்லோவேகியாவில் பலமடையவும் முடியும்.

கோடைகாலம் ஆரம்பித்துவிட்டது

Truthful READY MADE CLOTHES

லேசான துணிகளில் தயாரிக்கப்பட்ட

"ட்ரூத்புல்"

—: ரெடிமேட் ஆடைகளை :—

அணிந்து ஆனந்தம் அடையுங்கள்.

எங்கும் ஒரே விலை

ட்ரூத்புல் மான்யூபாக்சரிங்

கம்பெனி லிமிடெட், மதுரை.

பின்லாண்டிலும் ருஷ்ய எதிர்ப்பு சக்திகளை தூண்டிவிடவும் முயற்சிகள் நடக்கலாம்.

## பாலஸ்தீனப் பிரிவினை ரத்து.

ஐரோப்பிய அரங்கம் மட்டுமின்றி அராபிய நாடுகளிலும், ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா தன்னைப் பலப்படுத்திக்கொண்டுவருகிறது. பிரிட்டிஷ் சூழ்ச்சியாலோ, அல்லது வேறு காரணங்களாலோ பாலஸ்தீனப் பிரிவினை திட்டத்தை பாதுகாப்பு கவுன்ஸிலில் சமர்ப்பித்த அமெரிக்கா தன்னை பலஹீனப்படுத்திக்கொண்டிருந்தது உண்மையே. ஆயினும் இன்று பிரிவினைத்திட்டத்தைக் கைவிட்டு அராபியர்களின் ஒத்துழைப்பைப்பெற அமெரிக்கா முயற்சித்துவருவது பகிரங்க மர்மமாகும். அத்துடன் பிரான்சும் சைனாவும் ஒதுங்கிவிட்டதால் பிரிவினை திட்டத்தை ஆதரிப்பதில் ரஷ்யாவுக்குத் துணையாக யாருமில்லாமல் போய்விட்டது இந்நிலையில் பிரிட்டனும் அமெரிக்காவும் அராபியர்களை ரஷ்யாவுக்கு எதிராக தூண்டிவிட முடியும். பாலஸ்தீனத்தில் நேச நாடுகளின் தர்மகர்த்தா ஆட்சி ஏற்படுத்தவேண்டும் என்று புதிய யோஜனை ஒன்றை அமெரிக்கா சமர்ப்பித்துள்ளது. இவ்விதம் தன்னுடைய சில நண்பர்களையும் சேர்த்துக் கொண்டு பாலஸ்தீனத்தின்மீது ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள அமெரிக்காவால் முடியும். அதன் பிறகு பாலஸ்தீனத்தின் மீது ரஷ்ய படையெடுப்பு அபாயத்தை பிரசாரம் செய்து பாலஸ்தீன பாதுகாப்பின் பெயரால் அமெரிக்க, பிரெஞ்சு, பிரிட்டிஷ் ராணுவங்களை பாலஸ்தீனத்தில் இறக்குமதி செய்து தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ளக் கூடும். ஈரான், துருக்கி, கிரீஸ் எல்லை தளங்கள்மீது எற்கெனவே அமெரிக்க ஆதிக்கம் இருந்துவருகிறது. வெகு சில தினங்களுக்குள் ஜெர்மனியிலிருந்து ஈரான் வரை ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா அரண் அமைத்துவருவது இதனால் நன்கு விளங்கும். அந்த அரண் பூரணமாகும் தருவாயில் இருக்கின்றது.

## ஆப்கனிஸ்தானமும், சைனாவும்.

இதுவரை ஆப்கனிஸ்தானம் அமெரிக்க வலையில் அகப்படாமலேயே இருந்து வந்தது. அல்லது அமெரிக்க் அரசியல் வாதிகள் ஆப்கன்மீது கவனம் செலுத்தவில்லை என்றும் சொல்லலாம். ஆனால் அமெரிக்கா ஆப்கனையும் சுற்றிவளைக்கப் பார்ப்பதாகத் தெரியவருகின்றது. ஆப்கனிஸ்தானத்தில் நியமிக்கப்பட்டிருந்த அமெரிக்க பிரதிநிதி இப்பொழுது ஸ்தானிகர் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார். ட்ரூமன் பிரசங்கத்திற்குப் பிறகு மூன்றே தினங்களுக்குள் ஆப்கனில் அமெரிக்க ஸ்தானீகரின் நியமனம் ஆப்கனிஸ்தானத்தில் அமெரிக்கா ஏதோ புதிய நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதற்கு அறிகுறியாகும். இந்தியப் பிரிவினையால் ஆப்கானிஸ்தானத்தில் துணி, சர்க்கரை, உணவு, முதலிய பல தேவைப் பொருள்களின் கட்டு ஏற்பட்டுவிட்டது. அதுமட்டுமின்றி ஆப்கானிஸ்தானத்திலிருந்து இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்த உலர்ந்த பழவகைகளின் இறக்குமதி தடைபட்டு அதனால் ஆப்கன் வியாபாரிகளுக்கு பிரதி வருஷமும் கிடைத்துவந்த லக்ஷக்கணக்கான ரூபாய் தடைபட்டுவிட்டது. இந்நிலையில் ஏற்றுமதி, இறக்குமதி வசதிகளின் ஆசையைக் காட்டி ஆப்கனிடம் அமெரிக்கா சலுகைகளைப் பெற்றுக் கொண்டால் அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

ராய்ட்டரும், அமெரிக்க அஸோஸியேடட் பிரஸும் அறிவிக்கும் அளவுக்கும் அளவுக்கு சைனாவில் சர்க்கார் ராணுவத்தின் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லை என்பது நிச்சயம். அங்கு அநேகமாக ஓரே இடத்தில்தான் யுத்தம் நடந்துவருவதாகத் தெரிகிறது. சீன நிலைமையின் அபாயத்தைக்குறித்து பிரமாதமாய் பிரசாரம் செயது அதிக ராணுவ உதவி அனுப்பிவைப்பதற்கேற்ற சூழ்நிலை உண்டாக்குவதே அமெரிக்காவின் நோக்கமென்பது வெளிப்படை. அமெரிக்க பார்லிமெண்டில் சைனாவுக்கு மேலும் 57 கோடி டாலர் அளிக்க யோஜனையும் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதே இதற்குப் போதிய அத்தாட்சி.

## இந்தியாவும், பாகிஸ்தானும்

ரஷ்ய, அமெரிக்க யுத்தத்தால் இந்தியா பாகிஸ்தான் நிலைமை என்ன? ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் கவர்ந்துள்ள பிரச்னை இதுதான். கடல் கடந்த டொமினியன்களிலும் மேற்கு ஐரோப்பிய அந்த நாடுகளுடன் பொருளாதாரத் துறையில் ஒத்துழைக்கும் என பிரிட்டன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் இந்தியா பாகிஸ்தான் இரண்டையும் பாதிக்காமலிருக்கமுடியாது. எனவே இந்தியாவும் பாகிஸ்தானும் பொருளாதாரத்துறையில் பிரிட்டனுடனும் அதன் கூட்டாளிகளுடனும் எந்த அளவக்கு ஒத்துழைக்கப் போகின்றன. என்பதை இனித்தான் பார்க்கவேண்டும். ராணுவ உதவி சம்மந்தப்பட்டவரை ரஷ்ய எதிர்ப்பு அரங்கத்தில் இந்தியா பாகிஸ்தான் தங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்ற தங்களுடைய ஆசையை பிரிட்டனும் அமெரிக்காவும் அதிக நாள் மூடி வைத்திருப்பது சாத்தியமில்லை. கில்கிட், காஷ்மீர் தளங்கள் மீது அவர்களுச்கு கண்ணோட்டம் இல்லாமல் போகாது. இரண்டு டொமினியன்களும் அவர்களுடன் ஒத்

## ஹிந்து முஸ்லிம் கலகமல்ல. ☆ காலிகளின் விஷமத்தனம்.

# தலைவர் ஸ்ரீ காமராஜின் முழக்கம்.

தமிழ் மாகாண காங்கிரஸ் தலைவர் ஸ்ரீகாமராஜ் நாடாருடன் மத்திய ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி மெம்பர் A. M. அல்லாபிச்சை, ஜனாப் ஹாஜி M. அப்துர் ரஹ்மான் சாகிப் (சென்னை), K K. போக்கர் சாகிப் திருவண்ணாமலைக்கு விஜயம் செய்தனர். முஸ்லீம் நண்பர் வீட்டில் பகல் போஜனம் முடித்துக்கொண்டு சமீப கலவரங்களால் பாதிக்கப்பட்ட மசூதியையும், முஸ்லிம் வீடுகளையும் சுற்றிப் பார்வையிட்டார்கள் மாலையில் K. K. போக்கர் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. ஹிந்து முஸ்லிம்கள் பெருந்திரளாகக் கூடினர். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையின் அவசியத்தை தலைவர் வற்புறுத்தினர்.

A. M. அல்லாபிச்சை பேசுகையில், காங்கிரஸை பலஹீனப்படுத்துவது முஸ்லிம்களுக்கு பெரும் ஆபத்தை விளைவிக்குமென எச்சரித்தார். காங்கிரஸில் சேர்ந்து அதைப் பலப்படுத்தும்படி முஸ்லிம்களை வேண்டினர். இல்லையேல் ஹிந்துமஹாசபை பலம் பெற்று ஹிந்து முஸ்லிம் இருவர்களுக்கும் தீங்காக முடியுமென்பதை சுட்டிக்காட்டினர் திருவண்ணாமலையில் நடந்ததை மறந்துவிடும்படி முஸ்லிம்களை கேட்டுக் கொண்டார்.

பிறகு ஸ்ரீ காமராஜ் நாடார் அவர்கள் நடந்தேறிவிட்டதை மறந்து மன்னித்துவிடும்படி முஸ்லிம்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். சில விஷமிகளின் விஷமத்தனமே கலவரங்களுக்கு காரணம் என்பதை எடுத்துக்காட்டினர். முஸ்லிம் லீகைக் கலைத்துவிட்டு வகுப்புவாதமற்ற இதர தேசீய ஸ்தாபனங்களில் சேரும்படி முஸ்லிம்களுக்கு மனதைத் தொடும் முறையில் யோஜனை கூறினர். காங்கிரஸ் பலஹீனமடைவது நாட்டிற்கும் முஸ்லிம்களுக்கும் நன்மை பயக்காது என்று அறிவுறுத்தினர். திருவண்ணாமலையில் நடந்தது ஹிந்து முஸ்லிம் சண்டையல்ல. நம் தமிழ் நாட்டில் அப்படி நடக்கவும் முடியாது. முஸ்லிம்கள் யாரும் இங்கு கொல்லப்படவில்லை. ஆனால் அவர்களுடைய இரும்புப் பெட்டிகள் உடைத்து கொள்ளையிடப்பட்டிருக்கின்றன. எனவே இதை ஹிந்து முஸ்லிம் கலகம் என்று சொல்லமுடியாது. கொள்ளையடிப்பதற்காக சில காலிகள் செய்த விஷமத்தனம் என்று வன்மையாகக் கண்டித்தார்.

திருவண்ணாமலைக்கு சமீபத்திலுள்ள கிராமம் ஒன்றில் அகஸ்மாத்தாய் நெருப்பு பிடித்து வீடிழந்து தவிக்கும் ஹிந்து சகோதரர்களின் நிவாரணத்திற்கு பண உதவிக்காக கூட்டத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோது ஜனாப் ஹாஜி அப்துர்ரஹ்மான் சாகிப் ரூ.250 காமராஜ் நாடார்மூலம் நன்கொடையளித்தார்.

ஸ்தல காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

---

துழைக்க சம்மதித்தால் கல்கத்தா, பம்பாய், காரச்சி துறைமுகங்களையும் ரஷ்யாவுக்கு எதிராக உபயோகிக்க தயங்கமாட்டார்கள்.

இந்தியா நேரடியாக யுத்தத்தில் பங்கெடுத்துக் கொள்ளுமா, இல்லையா? என்று இப்பொழுது சொல்லுவதற்கில்லை. எந்த கோஷ்டியுடனும் இந்தியா சேராமல் இருப்பதிலேயே இந்திய நலன் இருக்கிறது. ஆயினும் யுத்தம் மூண்டபிறகு விலகியிருக்க முடியுமென்பது நிச்சயமில்லை. சில சந்தர்ப்பங்களில் நாடுகள் தங்கள் இஷ்டத்திற்கு மாறாக யுத்தத்தில் கலந்துகொள்ளவேண்டிய நிர்பந்தங்கள் ஏற்படுவதும் உண்டு. பிரிட்டனும் அமெரிக்காவும் ரஷ்யாவுக்கு எதிராக எடுத்துவரும் நடவடிக்கை சம்மந்தப்பட்டவரை இந்தியா பாகிஸ்தான் இரண்டின் நிலைமையும் ஒன்றுதான். எதிர்நோக்கியுள்ள அபாயங்களைக் குறித்து நாம் அலட்சியமாய் இருப்பதற்கில்லை. எப்படியும் மேற்கூறிய உண்மைகளைக்கொண்டு ரஷ்யாவை நாலா பக்கங்களிலிருந்தும் சுற்றி வளைக்க அமெரிக்கா ஓடியாடிக்கொண்டிருப்பது வெளிப்படை.

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 12—4—'48 திங்கட்கிழமை { இதழ் 12


## வகுப்புவாதம் ஒழிய ?

அரசியலிலிருந்து வகுப்புவாதம் ஒழிக்கப்பட இந்திய பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஏகமனதாக அனைவரும் ஆதரித்தனர். யாரும் எதிர்க்கவில்லை. அதைக் குறித்து நாம் சந்தோஷப்படுகிறோம். இந்திய தலைவர்கள் எல்லோரும் வகுப்புவாதத்தை வெறுக்கின்றனர் என்பதையே அது எடுத்துக்காட்டுகின்றது. இந்திய விடுதலைக்குப் பிறகு தனித்தொகுதி முறை மறைந்துவருகிறது. வகுப்புவாதம் ஒழிவதற்கு அது மிகவும் அவசியம் என்பது உண்மையே. ஆயினும் அதனால் மட்டும் வகுப்புவாதத்தை போக்கிவிட முடியாது. அதுவகுப்புவாத ஒழிப்பு வழியில் எடுக்கப்படும் முதல் அடியேயாகும். இத்துறையில் பூரணவெற்றியடைய பல காரியங்கள் செய்தாகவேண்டும். இந்நாட்டிலுள்ள ஹிந்து முஸ்லிம் சீக்கியர்கள் அரசியல், நாகரீக, கலாச்சார துறைகளில் ஒருவரோடு ஒருவர் மாறுபட்டவர்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கும்வரை, ஹிந்து நலன் முஸ்லிம் நலன், சீக்கிய நலன்களைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும் வரை வகுப்புவாதமும் இருந்தே வரும். கல்வி அறிவற்ற ஏழைகள், கட்டட துணியற்ற நிர்வாணிகளின் ஆதரவே வகுப்புவாதத்தின் ஜீவநாடி. பட்டினி பட்டாளத்தின் உணர்ச்சிகளை தூண்டிவிட்டு வகுப்புவாத லீடர்கள் அவர்களை ஆயுதமாக உபயோகித்துக்கொள்ளுகின்றனர். எனவே ஏழைபொது மக்கள் நிலைமை திருந்தாதவரை அவர்களுடைய வயிற்று பிரச்னை தீராதவரை அவர்களுக்கு உண்மையான அரசியல் கல்வி அளிக்கப்படாதவரை வகுப்புவாதம் தீரமுடியாது. ஒரு முஸ்லிம் முதலாளி மதத்தின் பெயரால் முஸ்லிம் தொழிலாளிகளை தூண்டிவிட்டு ஹிந்து சீக்கிய தொழிலாளிகளின் கோரிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடமுடியும் என்ற பயம். ஹிந்து சீக்கிய தொழிலாளிக்கு அந்த பயம் இருந்து வரும் வரை அவர்கள் வகுப்புவாதிகளாகவே இருப்பர். இதுமுஸ்லிம் தொழிலாளிகளுக்கும்பொருந்தும். இதைத்தடுக்க ஹிந்து முஸ்லிம் சீக்கிய ஏழைகளிடையே விழிப்புஏற்படுத்தப்படவேண்டும்.வயிற்றுப்பாடு உழைப்புக்குத்தகுந்த கூலி சம்மந்தப்பட்டவரை எல்லோருடைய பிரச்னையும் ஒன்றுதான். மத வித்தியாசத்திற்கு அதில் இடமில்லை. அதை போக்குவதன் மூலமே பிரச்னைதீர வழிகாணமுடியும் என்றஎண்ணம் ஏழை பொதுமக்களிடையே உண்டாக்கப்பட வேண்டும். சோற்று பிரச்னை தீர்க்கப்பட்டு விட்டால் அவர்கள் வகுப்புவாத லீடர்களின் வலையில் ஒருக்காலும் சிக்காமலிருப்பது திண்ணம். இரண்டாவதாக வகுப்புவாத கல்வி அகற்றப்படவேண்டும். மதம் மனிதனின் தனிப்பட்ட விஷயம். அதற்கு சமுதாயத்துடன் எவ்வித தொடர்புமில்லை. இந்நாட்டில் உள்ளவர்கள் அனைவரும் இந்தியர்கள். எல்லோருடைய நலனும் பிணைக்கப்பட்டிருக்கிறது என்ற உணர்ச்சி ஆரம்பமுதல் மாணவர்களிடையே வளர்க்கப்படவேண்டும். நம் சர்க்கார் வகுப்புவாதத்தை ஒழிப்பதில் வெற்றிபெறவேண்டுமென்றால் பத்திரிகைகள் கண்காணிக்கப்படவேண்டும். பத்திரிகைகள் ஒத்துழைத்தால் வெகு சுலபமாக வகுப்புவாதத்தை முறியடிக்கலாம். சாதாரணமாக ஒரு சிறிய சச்சரவு ஹிந்து முஸ்லிம் கலவரம் என்று பிரசுரிக்கப்படும் வரை, ஹிந்து பத்திரிகாசிரியர்கள் ஹிந்து நலனுக்கு கண்ணீர் வடிக்கும் வரை, முஸ்லிம் பத்திரிகாசிரியர்கள் முஸ்லிம் நலனுக்காக பிரலாபிக்கும் வரை வகுப்புவாதம் தொலைய வழியில்லை. பத்திரிகை பிரசாரத்திலும், மேடை பிரசங்கத்திலும் இருந்து வரும் குறைகள் நீங்குவதால் நல்ல பலன் ஏற்படமுடியும். இத்துறையில் நடவடிக்கையில் இறங்க உகந்தவொரு திட்டத்தை சர்க்கார் தயாரித்துக் கொள்ளவேண்டும். இன்று நாட்டில் அதற்கேற்ற சூழ்நிலை நிலவுகின்றது. தீவிரமாக வேலை செய்பவர்கள் மட்டுமே தேவை. மகாத்மா காந்திஜியின் ஆத்மீகத் தியாகத்திற்குப் பிறகு ஐக்கியத்திற்காக உழைக்கும் ஊழியர்களுக்கு புதியதொரு சக்தி கிடைத்திருக்கிறது. வகுப்புவாத பிற்போக்காளர்கள் ஓடி மறைந்துவிட்டனர் வகுப்புவாத வலையில் சிக்கி கண்மூடித்தனமாய் போய்க்கொண்டிருந்த பொது மக்களை மகாத்மாஜியின் ஆத்மீகத் தியாகம் விழிப்புறச் செய்து விட்டது. இந்தியாவை வகுப்புவாத சுழலிலிருந்து மீட்பதற்கு சர்க்காரை மட்டும் எதிர்பார்த்திருக்காமல் இந்த நாட்டின் நலனில் அக்கரை கொண்டுள்ள ஒவ்வொரு இந்தியனும் சந்தர்ப்பத்தை இழக்காமல் கடமையைச் செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

# வேலை நிறுத்தத் தொல்லை.

இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவின் முயற்சியால் தொழிற்சாலை முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே ஐந்துவருஷ இடைக் கால சமரஸ ஒப்பந்தம் ஏற்படுவது சாத்தியமாயிற்று. அத்தியாவசியமான உற்பத்தியைப் பெருக்குவதே அந்த ஒப்பந்தத்தின் நோக்கம். தேசத்தின் தேவைகள் பூர்த்தியாவதுமட்டுமின்றி அன்னியநாட்டு எக்ஸ்சேஞ்சில் இருந்துவரும் குறைகளும் அதனுல் தீர முடியும். இம்மாதிரியான இடைக்கால சமரஸ ஒப்பந்தங்கள் சர்க்கார் இலாக்காக்கள், பிரைவேட் கம்பெனிகள், இதர வட்டாரங்களிலும் ஏற்பட வேண்டியபதவசியம். ஸ்ட்ரைக்குகளைத் தூண்டும் கட்சிகள், நபர்களைத்தவிர மற்றவர்கள் அனைவரும் அந்த ஒப்பந்தத்தை வரவேற்கத்தான் செய்தனர். ஸ்ட்ரைக் நடக்காமல் இருக்கவேண்டுமென்றே அனைவரும் விரும்புகின்றனர்.

இருந்தும் எங்கும் ஸ்ட்ரைக் பேச்சாகவே இருந்து வருகிறது. உண்ணுவிரதம வரை இருக்க கல்கத்தாவில் உள்ள மத்திய அரசாங்க சிப்பந்திகள் தீர்மானித்தனர் டில்லியில் ஏககாலத்தில் ஸ்ட்ரைக் செய்ய பல இலாகாக்களின் சிப்பந்திகள் முடிவு செய்திருக்கின்றனர். அரசியல் காரணங்களுக்காக இம்மாதிரி ஸ்ட்ரைக்குகள் தூண்டி விடப்படுகின்றன என்று பண்டித நேரு வெளியிட்டார். அதிலுள்ள உண்மையை யாராலும் மறுக்கமுடியாது. ஏப்ரலில் எல்லா இடங்களிலும் ஸ்ட்ரைக்செய்ய திட்டங்கள் தயாராகி வருவதிலிருந்து ஸ்ட்ரைக்குகளை தூண்டுபவர்கள் அரசியல் காரணங்களுக்காகவே வேலை செய்கின்றனர் என்பதில் சந்தேகமேயில்லை. குறிப்பாக அமெரிக்காவும், ரஷ்யாவும் உலக யுத்தத்துக்கு விதை போட்டுக்கொண்டிருக்கும் இந்த சமயத்தில் ஸ்ட்ரைக்கின் திரை மறைவில் சூழ்ச்சிக்காரர்கள் வேலை செய்துவருகின்றனர் என்பது நிச்சயம்.

எனினும் ஒரு முக்கிய விஷயத்தை நாம் அலட்சியம் செய்து விடுவதற்கில்லை. தொழிலாளர்கள், சர்க்கார்சிப்பந்திகள் விஷயத்தில் சரியானபடி கவனம் செலுத்தப்படவில்லை என்பதுதான் அந்த விஷயம்.

ஸ்ட்ரைக் வலையில் அவர்கள் சிக்கிக்கொள்ள அறவே காரணம் இல்லாமலில்லை அந்த காரணத்தை எதிரிகள் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுகின்றனர். பிரச்னையின் தன்மையை சரிவர உணர்ந்து அவ்வித காரணத்தை நிவர்த்திக்க முயற்சிப்பது நம்முடைய கடமை.

ஐந்து வருஷ இடைக்கால சமரஸ ஒப்பந்த சலுகை மட்டுமின்றி அமிதலாப வரிச்சுமை நீக்கமும் முதலாளிகளுக்கு கிடைத்திருக்கிறது. தொழிலாளிகளுக்கு ஓரளவு விட்டுக்கொடுக்க முன்வரும்படி முதலாளிகளுக்கு ஏன் சொல்லக்கூடாது. லாபத்தில் ஒரு பகுதியை தொழிலாளிகளுக்கு பங்கிட்டுக் கொடுக்கும்படி முதலாளிகளை ஏன் தூண்டக் கூடாது? தொழிலாளர்களுக்கு போனஸ் அளிக்கப்படும் என்று சர்க்கார் உறுதி யளித்துள்ளது உண்மையே. ஆயினும் முதலாளிகள் லாபத்தைக் குறைத்து பொய்க் கணக்கு சமர்ப்பிக்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

எனவே முதலாளிகளின் வருமானத்தைக் கண்காணிப்பதே அதற்கு சிறந்த பரிகாரம். சட்டத்தின் மூலமாக இல்லாமல் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு வருமானத்தைக் கணக்கிட்டுத் தெரிந்துகொள்ளக் கூடிய சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். வருமானத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியை போனஸாகவோ இனமாகவோ தொழிலாளர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படலாம். இதனுல் தொழிலாளர் பிரச்னையை எளிதில் தீர்க்கமுடியும். சர்க்கார் சிப்பந்திகளையும் தொழிலாளர்களையும் விஷமிகளின் வலையிலிருந்து மீட்பதற்கு கம்யூனிஸ்டுகள் அன்னிய நாட்டுடன் தொடர்பு கொண்டிருப்பதை அம்பலப்படுத்துவது மட்டும் போதாது. அவர்களுடைய குறைகளைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதும் அவசியமாகும். இன்றுவரை நிர்வாக இயந்திரம் மந்தமாகவே இருந்து வருகின்றது. அதிகாரிகள் பழய போக்கிலே போய்க் கொண்டிருக்கின்றனர். சம்பளக் கமிஷன் சிபார்சுகள் பல இலாகாக்களில் இன்னும் அமுலாக்கப்படவில்லை. சிப்பந்திகளின் சட்டபூர்வமான உரிமைகளையும் பறிக்க அதிகாரிகள் முயற்சிக்கின்றனர். அலவன்ஸ் கிடைப்பதில் தாமதமும் உடை, விடுமுறை பிரச்னையில் நிர்ப்பந்தமும் இருந்துவருகிறது. இந்த குறைகள் பரிகரிக்கப்படவேண்டும். சர்க்கார் நம்முடையது தான். தங்களுடைய சர்க்காரை பலப்படுத்த வேண்டியது ஒவ்வொரு சர்க்கார் சிப்பந்திக்கும் கடமை.

# முஸ்லிம்கள் யார்?

இஸ்லாம் இன்னதென்று உணர்ந்து இஸ்லாமிய அச்சில் வார்க்கப்பட்ட வாழ்க்கையை மேற்கொண்டு நடக்கும் முஸ்லிம்களும் உண்டு. முஸ்லிம் வயிற்றிலே பிறந்துவிட்டதால் முஸ்லிம்கள் என்றுச் சொல்லிக்கொள்ளும் முஸ்லிம்களும் உண்டு. முஸ்லிம்களை இவ்விதம் இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம். இஸ்லாம் என்பது சருமம், சதை, உதிரம். எலுப்பு, நரம்புகளின்பெயரல்ல, நோக்கங்கள். கொள்கைகள் நம்பிக்கைகளால் இஸ்லாம் உருவாகின்றது. இஸ்லாமிய கொள்கைகளை உணர்ந்து அதையனுசரித்து நடக்காதவரை ஒருவன் முஸ்லிம் ஆகமுடியாது. இன்றைய முஸ்லிம்களின் கேவல நிலைமைக்கு பெயரளவில் உள்ள அவர்கள் மதமே காரணம். எதிர்காலத்தில் நிம்மதியாக வாழ்ந்து இஸ்லாமிய கண்ணிய வாழ்க்கைக்கு உத்திரவாத மளிக்கப்படவேண்டும் என்றால் நாம் உண்மை முஸ்லிம்களாக இருக்க முயற்சிக்கவேண்டும். காலங்கடத்தாது நம்முடைய அடிப்படை குறைகளை போக்கிக்கொள்ள வேண்டும். இன்று கிடைத்திருக்கும் கடைசி அவகாசத்திற்குப்பிறகு, நம்மை நாம் திருத்திக்கொள்ள காலம் நமக்கு அவகாசம் அளிக்கப்போவதில்லை.

ராணுவ விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்கும் சோல்ஜருக்குத்தான் உரிமைகளைக் கேட்க உரிமையுண்டு. அவனுக்குத்தான் உரிமைகள் வழங்கப்படும் மேலதிகாரிகளுக்கு கட்டுப்படாமல் பொருப்பை தட்டிக்கழித்து கடமையைச் செய்யாமல் இருப்பதோடல்லாமல் ராணுவ விதிகளுக்கு நேர்மாறாகவே நடக்கும், சோல்ஜர் ஒருவன் உரிமைகளை பெற முடியாது கோர்ட் மார்ஷல் தண்டனைக்கே உரியவனாவான். இஸ்லாமிய சோல்ஜர்தான் முஸ்லிம்கள். இஸ்லாமின் பெயரால் உரிமைகளை கேட்க இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பவர்களுக்கே உரிமையுண்டு இஸ்லாமிய போதனைகளை புறக்கணித்து சட்ட திட்டங்களை அலட்சியம்செய்து இஸ்லாமுக்கு நேர் விரோதமான வாழ்க்கையை நடத்துபவர்கள் இஸ்லாமின் பெயரால் உரிமைகள் கேட்பதும் இஸ்லாம் இஸ்லாமென்று கூப்பாடு போட்டு "நாம் முஸ்லிம்கள், நம்முடைய உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்" என்று கத்துவதற்கு எவ்வித உரிமையும் கிடையாது. இஸ்லாமிய கடமைகளை நிறைவேற்றாத இந்திய முஸல்மான்கள் உரிமைகளைக் கேட்கலாம். ஆனால் இஸ்லாமின் பெயரால் அல்ல. இஸ்லாமிய விரோதிகள் அவர்களே யாவர். தூக்கு மேடைக்கும் ஜன்ம தண்டனைக்குமே அவர்கள் உரியவர்கள். இஸ்லாமிய கடமைகளை சரிவர நிறைவேற்றி உரிமைகளைக்கேட்டால் ஒருக்காலும் தோல்வி ஏற்பட முடியாது. இஸ்லாம் என்றுமே நம்பிக்கை

---

ஆயினும் இவ்வித எண்ணம் சிப்பந்திகளிடையே ஏற்படுத்தப்படவேண்டியதவசியம். இக்குறைகளைப் போக்க சம்மந்தப்பட்ட மந்திரிகள் நேரடியாக தலையிடவேண்டும். ஆலோசகர்கள் என்ற அந்தஸ்தில் சர்க்கார் தொடர்பற்றவர்களின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெறலாம். ஒவ்வொரு இலாகா சிப்பந்திகளும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் தங்களுடைய குறைகளை எடுத்துச்சொல்ல சந்தர்ப்பம் அளிக்கப்படலாம் அந்த குறைகளை நிவர்த்திப்பதற்கு ஒரு தனி மனிதனிடம் பொறுப்பு ஒப்படைப்பதன் மூலம் பல கஷ்டங்களை சமாளிக்க முடியும். செலவுகளைக் குறைப்பதற்கும் அது நல்ல உபாயமாகும். வேலையிலிருந்து நீங்கிய பிறகு வாழ்க்கை நடத்த அவர்கள் என்ன செய்வார்கள் என்பதையும் நாம் அலட்சியம் செய்துவிடமுடியாது. வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு முன்பே அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்படவேண்டும். சிப்பந்திகளைக் குறைப்பதற்குப் பதிலாக பெரிய அதிகாரிகளின் சம்பளங்களைக்குறைக்கலாம். பிரயாண செலவுகளையும், இதர செலவுகளையும் குறைத்து பெரிய பெரிய அதிகாரிகள் சம்மந்தப்பட்டவரை சிக்கனம் அனுஷ்டிக்கப்படுவதால் பல லக்ஷம் ரூபாய் மிஞ்சமுடியும். நிவர்த்திக்கப்படமுடியாத பெருங்குறைகள் ஒன்றுமில்லை. கடமை உணர்ச்சியும், அவசரமுமே அவசியம். எந்த ஒரு இலாகாவிலும் குழப்பமோ வேலை நிறுத்தமோ ஏற்பட்டால் அந்த இலாகாவின் அதிகாரியே அதற்குப் பொறுப்பாளி என்று எச்சரிக்கப்பட வேண்டும். இலாகாவில் தொந்தரவு ஏற்படுவதற்கு காரணமாக இருக்கும் அதிகாரிகள் தேசத்துரோகிகளாகக் கருதப்படுவார்கள் என்று தெளிவாக அறிவிக்கப்படுவதுடன் அதற்காகக் கடுமையாக தண்டனை விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கப்படவேண்டும். வேலை நிறுத்தங்களைத் தடுக்க இது சிறந்த முறையாகும். முதலில் நம்முடைய வீட்டை நாம் திருத்தி அமைத்துக் கொள்ளவேண்டும். அதன் பிறகு சுயநலக்கார தலைவர்களோ, கட்சிகளோ விஷமம் செய்வதிலும் சூழ்ச்சிகளிலும் வெற்றிபெற முடியாமல் போய்விடும்.

இழக்கச் செய்வதில்லை. இஸ்லாமுக்கு மாருன வாழ்க்கையை நடத்திக் கொண்டே இஸ்லாமின் பெயரால் நமக்கு வேண்டியதைப்பெற முயற்சிப் பதே நம்முடைய தோல்விகளுக்கு பெருமளவு காரணம்.

முஸ்லிம்கள் பக்தி கலந்த நேர்மையான வாழ்க் கையை நடத்த வேண்டுமென்றும் அப்படிச் செய் தால் அவர்களுக்கு மனித வர்க்கத்தினிடையே உயர் நிலை கிடைக்குமென்றும் திரு. குர்-ஆன் உறுதியளிக் கின்றது. அவ்வித உயர்நிலை முஸ்லிம்கள் ஏன் இழந்து விட்டனர்? குர்-ஆன் அளிக்கும் உறுதி பொய்யா, (எந்த முஸ்லிமும் அப்படி நினைக்கவும் முடியாது) அல்லது நாம் குர்-ஆனை அலட்சியம் செய்துவிட் டோமா? நேர்மைக்கு மாருக நாம் நடந்தோம் பொய்யும், பிறட்டும் கையாண்டோம். அக்கிரமத் தில் இரங்கினோம், ஒழுக்கம் இழந்தோம். குர்-ஆன் நம்மை முன்னேற்றிச்செல்ல விரும்புகிறது நாம் பின்னேக்கி ஒடினேம். அதன் பலனுக இன்று நாம் இகழ்ச்சி அடைந்தோம், கேவலப்பட்டோம். அழிந்தோம். நம்முடைய கௌரவத்தின் பிரகாச தீபம் அணைந்தது. வாழ்விலும், தாழ்விலும் மற்றவர் களின் தயவையும் தாட்சண்யத்தையும் எதிர்பார்த் திருக்கும் அளவுக்கு பலஹீனமடைந்தோம் இஸ்லா மின் கௌரவம் குலைந்தது. முஸ்லிம்களின் செய்கை களுக்கு இஸ்லாம்மீது குறை கூறப்படுகின்றது. இஸ்லாமை பரப்புவது ஒருபுறமிருக்க முஸ்லிம்கள் நிலைத்திருப்பதே கஷ்டமாய்விட்டது.

நம்முடைய கையில் இஸ்லாமிய தராசு கொடுக் கப்பட்டிருந்தது. நியாயத்தையும், சத்தியத்தையும் நிலை நிறுத்தி கடவுளின் சிருஷ்டியை அக்ரமம் அநியா யத்திலிருந்து காப்பாற்றி நேர்மை, ஒழுக்கத்தின் கொடியை உயர்த்தி, உலகத்தை தவருன வழியினின் றும் திருப்பி, சத்திய வழியில் ஈடுபடுத்தி, மனிதவர்க் கத்திற்கு ஒழுக்கம் கற்றுக்கொடுத்து, அறிவைத் துலக்கவேண்டியது, முஸ்லிம்களின் கடமை அக் ரமத்தை தடுப்பதைவிட்டு அக்ரமம் செய்பவர்களும் தீமைகளை அகற்றுவதை விட்டு தீங்கிழைப்பவர்களும் ஒழுக்கம் கற்றுக்கொடுப்பதை விட்டு ஒழுக்கம் இழப் பவர்களும் இஸ்லாமுக்கு எவ்வித சேவையும் செய்ய முடியாது.

இஸ்லாம் குலத்தையும், தேசத்தையும் பொருத்த தல்ல நோக்கம் நடத்தையை பொருத்தேயிருக்கிறது. ஒவ்வொரு முஸ்லிமும் தன்னுடைய நோக்கங்களைச் செப்பனிட்டு இஸ்லாமிய வழியைவிட்டு பிறழாமல் இருக்கவேண்டும். சிந்தனைசக்தியையும், அறிவையும் துலக்கி மெருகு கொடுக்கவே இஸ்லாம் தோன்றிற்று உங்கள் அறிவைக் கொண்டு சிந்தியுங்கள். உங்கள் கண்களைக்கொண்டு பாருங்கள். உங்கள் காதுகளைக் கொண்டு கேளுங்கள் என்று இஸ்லாம் சொல்லு கின்றது. உண்மைக்கு மாருன விஷயங்களை முஸ் லிம்கள் கேட்கவோ ஏற்கவோ கூடாது. நடப்பதை கண்களைக்கொண்டு பார்த்து அதனுல் படிப்பினையை கற்றுக்கொள்ளவேண்டும். அர்த்தமற்ற பேச்சு களுக்கு மூளையில் இடமளித்து, ஆதாரமற்ற வதந்தி களை நம்புவது முஸ்லிம்களின் வேலையல்ல. புலன் களைச் சரியான வழியில் பிரயோஜனப் படுத்திக் கொள்ளும் முஸ்லிம்கள் சம்பவங்களின் தன்மையை தெரிந்துகொள்ளவும், உண்மைகளை உணர்ந்து உகந்த வழியில் நடந்து கொள்ளவும் முடியும். அவனுடைய பேச்சில் நிதானமும் கம்பீரமும் காணலாம். முஸ் லிம்கள் தீக்ஷண்யமான அறிவுள்ளவர்கள் என்று உலகத்தோர் மெச்சுவார்கள். முஸ்லிம்களின் சகல கஷ்டங்களும் நீங்க அது ஒன்றே போதும்.

---

## சமூகத்துக்காக சுயநலத்தை விடுவார்களா?

(A. M. அல்லா பிச்சை)

மத்திய ஒற்றுமை முன்னேற்றக் கமிட்டி மெம் பர் ஜனப் A. M. அல்லாபிச்சை பத்திரிகைகளுக்கு கீழ்வரும் அறிக்கை விடுத்துள்ளார். இரண்டு சமு தாய அடிப்படையில் பாகிஸ்தான் லட்சியத்துக்காக முஸ்லிம் லீக் அபேட்சகர்கள் யூனியன் சட்டசபை களின் தேர்தல்களில் போட்டியிட்டனர். சாத்திய மான அளவுக்கு அவர்களுடைய தலைவர் இந்திய டொமினியன் முஸ்லிம்களுக்கு தீங்கிழைத்திருப்பதை இப்பொழுதுதான் அவர்கள் உணருகின்றனர். அவர் கள் இன்னும் சட்டசபைகளில் நீடித்து இருப்பதால் யூனியன் முஸ்லிம்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்பட முடியாது. எனவே அரசியல், பார்லிமெண்டரி நட வடிக்கைகளிலிருந்து விலகி சட்டசபைப் பதவிகளை ராஜினமா செய்து வெளியேறுவதுதான் அவர்கள் செய்யக் கூடிய ஒரே ஒரு சிறந்த காரியம். முஸ்லிம் களுக்கு இது பெருத்த அளவில் உதவ முடியும். அதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வருவதில் அர்த்தமில்லை. யூனியன் முஸ்லிம் சகோதரர்களின் நலனுக்காக அவர்கள் சுயநல ஆசாபாசங்களை தியா கம் செய்ய முன் வரவேண்டும்.

# யுத்த அபாயம்.

யுத்தம் எப்பொழுது ஆரம்பமாகும்? சீக்கிரமாகவா, அல்லது நாட்கள் செல்லுமா? இந்த கேள்விக்கு பதிலளிப்பது கொஞ்சம் கஷ்டம்தான். ஆயினும் ஐரோப்பாவிலும் இதர தேசங்களிலும் நடக்கும் சம்பவங்கள், ரஷ்யாவுக்கு எதிராக பிரிட்டன், அமெரிக்க நடவடிக்கைகள், உலகம் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்படுகிறது என்பதற்கு, போதிய அத்தாட்சியாகும். ரஷ்யத் தொகுதி; பிரிட்டிஷ் அமெரிக்கத் தொகுதி மற்றொன்று. இரண்டு தொகுதிகளுக்கிடையே நாளுக்குநாள் வேற்றுமைகள் அதிகரித்து வருகின்றன. தீர வழியிருப்பதாகவும் தெரியவில்லை. ரஷ்யாவும். அமெரிக்காவும் ஒன்றையொன்று முந்திக் கொள்ளும் வேலை ஐரோப்பாவில் மும்முரமாய் நடந்து வருகிறது. ஒரு புறம் இவ்விரு நாடுகளும் நடுநிலைமை வகிப்பதுடன் ஐரோப்பிய இதர நாடுகளை தங்களுடன் சேர்த்துக் கொள்ள லஞ்சத்தையும், நிர்பந்தத்தையும் உபயோகிக்கின்றன. இன்னொரு புறம் யுத்த முஸ்தீபுகள் செய்தும் வருகின்றன. ஜனதிபதி ட்ரூமனுடைய பயமுறுத்தலுக்குப் பிறகு ஒருக்கால் ரஷ்யா அடங்கிவிடலாமென்று எதிர்பார்க்கப்பட்டது ஆயினும் இன்று ஜெர்மனியில் நடப்பதைப் பார்த்தால் பகடை ரஷ்யாவுக்கு சாதகமாகப் பிரண்டு விழுகின்றது. பர்லின் வழியாக அமெரிக்க, பிரெஞ்ச், பிரிட்டிஷ் போக்குவரத்தை ரஷ்யா சோதனைக்குள்ளாக்கி விட்டது. ரஷ்யாவின் ஆதிக்கத்திலிருக்கும் ஜெர்மன் எல்லையில் ராணுவத்தை நிறுத்தி செய்கையளவில் ரஷ்யா எல்லையை மூடிவிட்டது என்றே சொல்ல வேண்டும். ரஷ்யாவின் இச் செய்கையை பிரிட்டன், அமெரிக்கா ஆக்ஷேபித்திருக்கின்றன. ஆயினும் ரஷ்ய கமாண்டர் இவ்விரு நாடுகளின் மீதும் வேவு, 'சுரண்டல், கொள்ளை முதலிய குற்றங்களை சுமத்துகிறார்.

உண்மையில் ஜெர்மனி பிரிக்கப்பட்டுவிட்டது. ரஷ்யா தன்னுடைய ஜெர்மன் பிரதேசத்தில் ஊன்றிக் கொண்டுவிட்டது, பிரிட்டன், பிரான்ஸ் அமெரிக்கா வசமுள்ள ஜெர்மன் பிரதேசங்களை ஒன்று சேர்த்து ரஷ்யாவுக்கு எதிராக அணி அமைக்க முயற்சிகள் நடக்கின்றன. அங்கு சுதந்திர சர்க்கார் ஏற்படுத்தி ரஷ்யாவுக்கு எதிராக அதை உபயோகிப்பதும் சாத்தியமே. இவ்விதம் தங்கள் கைதிகளாயிருக்கும் நாஜி ஜெனரல்கள், அதிகாரிகள் ஒத்துழைப்பும், நல்லெண்ணமும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் யூனியனுக்கு கிடைக்க முடியும்.

இன்னொரு புறம் பாலஸ்தீனத்தில் இதே நிலைமையைக் காணலாம். பாலஸ்தீனப் பிரிவினை திட்டம் ரத்தாகி விட்டதாகவே சொல்ல வேண்டும். பாதுகாப்பு கவுன்ஸில் ஒரு முகமாய் யூதர்களுக்கும், அராபியர்களுக்கு மிடையே இடைக்கால சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்த முடிவு செய்துவிட்டது. அராபிய பிரதிநிதிகளும் அதற்கு இசைந்துவிட்டனர். அதாவது பாலஸ்தீனத்தில் அமெரிக்க வலை விரிக்கப் பட்டுவிட்டது. இந்நிலையில் யூதர், அராபியர்களை பாதுகாக்கும் பெயரால் அமெரிக்கா பாலஸ்தீனத்தில் ராணுவத்தை அனுப்பி வைக்க முடியும். ரஷ்ய அபாயத்தைக் காட்டி பயமுறுத்தி யூதர்களும் அராபியர்களும் ராணுவத்தில் சேர்க்கப்படலாம்.

வேறொரு புறம் ஸ்பெயினுக்கு கோடிக்கணக்கான டாலர்கள் உதவி அளிக்கப் போவதாக வெளியிடப் பட்டிருக்கிறது. இந்த முன்னேற்பாடுகளெல்லாம் குறிப்பிட்ட ஒரு லட்சியத்தையே காட்டுகின்றன. அதுதான் யுத்தம். யுத்தம் வெகு சமீபத்தில் மூளாமலிருக்கலாம். ஏனெனில் பிரிட்டன், அமெரிக்கா இதுவரை எந்த ஒரு அரங்கத்திலும் தளங்கள் ஏற்படுத்திக்கொண்டு தயாராகவில்லை. எந்த அரங்கத்திலும் அமெரிக்கா போதுமான யுத்த தளவாடங்கள் அனுப்பிவைக்க முடியாமல் இருப்பதுவும் வாஸ்தவமே அதற்கு நேர்மாறாக ஒவ்வொரு அரங்கத்திலும் அமெரிக்காவைவிட அதிகமான முன்னேற்பாடுகள் ரஷ்யாவால் செய்யப்பட்டிருக்கின்றன. முன்னேற்பாடுகள் பூரணமாய் செய்தான பிறகுதான் அமெரிக்கா யுத்தத்தை விலைக்கு வாங்க முடியும். இல்லையேல் வெகு குறுகிய காலத்தில் ரஷ்யா ஐரோப்பா முழுவதையும் சுற்றி வளைத்துக் கொள்ளும் என்பது நிச்சயம்.

அரசியல் அறிவு வளர்ச்சி அடைய

"ஆஸாத்"

அவசியம் படிக்கவேண்டும்.

# முஸ்லிம் சமூகமே! கேள்.

## லீக் தலைவர்கள் அன்றும், இன்றும்

—(கடையநல்லூர் த. கா. மு. முஹம்மது யூசுப்)—

முஸ்லிம் பொதுமக்களே! நீங்கள் திரிகரண சுத்தியுடன் நம்பியிருந்த முஸ்லிம் லீக் தலைவர்கள் ஆகஸ்டு 15உக்குமுன் உங்களுக்குச் சொன்ன ஆசை வார்த்தைகளையும் இன்று சொல்லுகிற ஆசை வார்த்தைகளையும் காய்தல், உவைத்தலின்றி பரிசீலனை செய்து பார்த்தீர்களா? அன்று இந்தியாவில் 10 கோடி முஸ்லிம்களும் ஐக்கியமாய், கட்டுப்பாடாய், ஒரே தலைவரைப் பின்பற்றி, வாழ்விலும் தாழ்விலும் ஒற்றுமையாய் இருப்போமென்று 10 வருஷ காலமாய்ச் சொல்லி வந்தார்களே! இன்று 10 கோடி முஸ்லிம்களின் ஐக்கியத்தையும் குலைத்து 5 கோடி முஸ்லிம்களை நட்டாற்றில்விட்டுவிட்டு உங்களுக்கு வேறு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்களே! இதற்காகவா அல்லும்பகலும் ஒற்றுமைக்குச் சலியாதுழைத்தோம்? அன்று ஹிந்துக்களுக்கு அடிமையாய் வாழமாட்டோம். அதற்காக 10 கோடி முஸ்லிம்களும் மடிந்தாலும் மடிவோமென்று சொன்னார்களே! இன்று 5 கோடி முஸ்லிம்களையும், 28 கோடி ஹிந்துக்களுக்கு மத்தியில் நிர்க்கதியாய் விட்டுவிட்டு, அவர்களுக்கு விஸ்வாசமாய் நடந்துகொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்களே! இதற்காகவா அன்று அவர்கள் சொல்லைக் கேட்டு, ஹிந்துக்களையும் பகைத்து சர்வத்தியாகமும் செய்தோம்? அன்று சிறுபான்மைப் பிரச்னை தீர வேண்டுமானால் பாகிஸ்தான் ஒரே வழி என்றார்களே? இன்று சிறுபான்மைப் பிரச்னை தீர்ந்துவிட்டதா? ஹிந்துக்கள் பசுவைப் பூஜிக்கிறார்கள். நாங்கள் பசுவைப் புசிக்கிறோம். இந்நிலையில் எவ்வாறு ஒத்து வாழ முடியுமென்று சொல்லி பாகிஸ்தான் கேட்டார்களே! இன்று நீங்கள் பிரிந்து வாழ வழி கிடைத்ததா? மதம், கலை, நாகரீகம் முதலிய எல்லா வகைகளிலும் வேறுபட்ட இனத்துடன் ஒத்து வாழ முடியாதென்று சொன்னவர்கள் இன்று ஒத்துவாழ்கிறோமென்று சொல்லுகிறார்களே! இதை யார் நம்பப்போகிறார்கள்?

அன்று காங்கிரஸ் மந்திரிசபைகள் வெளியார் நிர்ப்பந்தம் இல்லாமல் தன் இஷ்டத்துக்கு ராஜினாமா செய்ததும், உங்களை விமோசனதினம் உங்களை விமோசன தினம் கொண்டாடி விதலைக்குப் பிரார்த்தனை செய்யும்படி சொன்னவர்கள் இன்று காங்கிரஸ் அரசாங்கத்துக்கு விஸ்வாசமாயிருக்கிறோமென்று சொல்லுகிறார்கள். அன்று எந்த நியாயத்துக்காக விமோசன தினம் கொண்டாடச் சொன்னார்கள்? இன்று எந்த நியாயத்துக்காக விஸ்வாசமாய் இருக்கச் சொல்லுகிறார்கள்? இவைகளெல்லாம் தங்கள் தலைமைப் பதவியைக் காத்துக் கொள்ளத்தானே! இல்லையென்று யாரே மறுக்கவல்லர்? சீழ் வடியக் கூடிய நீக்ரோ அடிமை ஒருவன் அரசியல் தலைவராயிருந்தாலும் அவ்வரசாங்கத்துக்கு விஸ்வாசமாய் நடந்துகொள்ளுவதுதான் முஸ்லிம்களுக்கு அழகு என்று நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லியிருப்பதாக இன்று எடுத்துச் சொல்லுகிறார்களே! இது யாரை ஏமாற்றுவதற்கு? இவர்களுடைய நிலைமையை அன்று எடுத்துச் சொன்ன தேசிய முஸ்லிம் தலைவர்களையும் குறிப்பாக மௌலானா அபுல் கலாம் ஆஸாத் அவர்களையும் வாயில் வந்தவாறு திட்டி சமூகத்துரோகிகள் என்று பட்டமும் சூட்டி தூஷித்தார்களே! இன்று யார் சமூகத் துரோகிகள்? உங்களைக் காட்டிக் கொடுத்து விட்டு ஓடிவிட்டார்களே! அவர்களா? அல்லது உங்களுடனிருந்து உங்களின் வாழ்விலும் தாழ்விலும் ஊழியம் செய்துகொண்டிருக்கும் தேசீய முஸ்லிம் தலைவர்களா? சற்றே நெஞ்சில் கை வைத்து ஆர அமர யோசித்து பதில் சொல்லுங்கள் பார்ப்போம்! முஸ்லிம் சமுதாயத்துக்காக சகல சுக போகங்களையும் துறந்து அன்று உழைத்தோமென்று சொன்னார்களே! இன்று உங்களுடனிருந்து அனுபவித்தார்களா? பாகிஸ்தானில் போய் இருந்துகொண்டு அங்கு இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்தப் போவதாக ஜம்பம் பேசிக்கொண்டிருக்கிறார்களே? இதற்குத்தானா அன்றுநீங்கள் உழைத்தீர்கள்? தனக்கு வேண்டுமென்று விரும்புவதைத் தன் சகோதரனுக்கும் வேண்டுமென்று விரும்பும் ஒருவனே முஸ்லிமாய் இருக்க முடியுமென்று நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்களே! யாருக்காக?

இன்னும் எண்ணத் தொலையாத விஷயங்களைச் சொல்லி அவர்கள் வழிக்கு உங்களைப் பயன்படுத்திக் கொண்டு காரியமானவுடன் காலை வாரிவிட்டுப் போய் விட்டார்களே! இதுதானா சகோதரத்துவம்? இதற்குத்தானா வெள்ளிக்குண்டுகளையும், வைர வாட்களையும் அனுப்பினீர்கள்? அவர்களின் இவ்விதத்

துரோகச் செய்கைகளைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்த பின்னும் உங்களுக்கு புத்தி தெளிவு ஏற்படவில்லை என்றால் அந்தோ! உங்களின் அறிவுக்கு ஆண்டவனே வெளிச்சம் காட்டவேண்டும்.

இன்னும் அவர்களின் வழியைப் பின்பற்றி சென்னை மாகாண முஸ்லிம் லீக் தலைவர்கள் தங்கள் தலைமைப்பதவியையும் தங்கள் சொந்த கௌரவத்தையும் காத்துக்கொள்ள பழைய முறையை அதாவது, இஸ்லாம், ஒற்றுமை, கட்டுப்பாடு என்றெல்லாம் சொல்லி உங்களை ஏமாற்றப் பார்க்கிறார்களே! இனியும் நீங்கள் ஏமாறப்போகின்றீர்களா? முஸ்லிம்களின் குறைகளை எடுத்துச் சொல்ல முஸ்லிம்களுக்கென ஒரு தனிஸ்தாபனம்வேண்டுமென்றுபத்திரிகைகளில்பன்னி பன்னி எழுதிவருகிறார்களோ! சென்னைக்கு மாத்திரம் தனி ஸ்தாபனம் வேண்டுமா? மற்ற மாகாண முஸ்லிம்கள் லீகை சட்ட சபைகளிலும் வெளியிலும் கலைத்துவிட்டார்களே! அவர்களின் குறைகள், உரிமைகள் பாதுகாக்கப்படாமலா போகும்? தனி ஸ்தாபனத்தின் மூலம் நீங்கள் அடைந்த அபக்கியாதியும் அல்லல்களும் போதாதா? மற்ற ஸ்தாபனங்களில் சேர்ந்து நம்குறைகளையும், உரிமைகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியாதா? கிழக்குப் பஞ்சாபில் பல ஆயிரம் மஸ்ஜித்களில் ஆண்டவன் பெயரைச் சொல்லக்கூட ஆளில்லாமல் போனதைக் கண்முன்னால் பார்த்த பின்னும் தனி ஸ்தாபனம் வேண்டுமென்று சொல்லக்கூடியவர்களின் அறிவுக்கு வருந்தாமல் இருக்க முடியவில்லை! 3—4—48-ல் இந்தியா டொமினியன் பார்லிமென்டில் அரசியலில் வகுப்புவாத ஸ்தாபனங்களுக்கு இடமில்லையென்று தீர்மானம் செய்திருக்கிறதையும் அந்த தீர்மானத்தை வரவேற்று நமது மதிப்பிற்குரிய பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு அவர்கள் செய்த பிரசங்கத்தையும் பத்திரிகைகளில் பார்த்தபின் தனி ஸ்தாபன கிளர்ச்சியை விட்டு விடுவீர்களென்று நம்புகிறேன். நீங்கள் இதற்குமுன் முஸ்லிம்லீகின் மூலமாய்ச் செய்த பாபங்களுக்குப் பிராயச்சித்தமாக முஸ்லிம் லீகையும், அதன் தலைவர்களையும் விட்டு விட்டு தேசிய முஸ்லிம் தலைவர்களையும் குறிப்பாக மௌலானா ஆஸாத் அவர்களையும் பின்பற்றி காங்கிரஸில் சேர்ந்து இந்நாட்டுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் சேவை செய்வதுடன் வருங்கால உங்கள் சந்ததியார்களுக்கும் வழிகாட்டியாயிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏ இறைவா! முஸ்லிம் சமுதாயம்—வழிகாட்டிகளின் தவறுதலால் செய்த பாபங்களை உன் கருணையால் மன்னித்தருளுமாறு பிரார்த்திக்கிறேன்.

# உணவுத் தேக்கமும் நபிநாயகத்தின் நோக்கமும்.

(M. மன்னுன் முகம்மது, கல்லிடைக்குறிச்சி)

அன்பர்களே!

பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன் அந்தகார அவனிக்கோர் ஆதித்தனேபோல் அரேபியாவின்கண் அவதரித்த அண்ணல் நபி நாயகம் அவர்களும் அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றிய மெய்யடியார்களும் உலக மக்கட்கருளிய பல அரும்பெரும் அறவுரைகளில் ஒரு சிலவற்றை அன்பர்கள் கவனத்துக்குக் கொண்டுவர எடுத்தெழுதியுள்ளேன். அவை இன்றைய உலகுக்கு எத்துணை நன்மை பயக்குமென்பதை ஆழ்ந்து கவனியுங்கள்.

1. யாராவது ஒருவன் கிராக்கியான சமயத்தில் விற்பதற்கென்று தானியத்தை வாங்கி நாற்பது நாள் சேமித்துவைப்பானாகில் பிறகு அந்த தானியம் முழுவதையும் தர்மம் செய்தாலும் அந்த பாதகத்திற்குப் பிராயச்சித்தமாகமுடியாது.

2. (விலையேற்றத்தில் விற்க) தானியத்தை நாற்பது நாள் கட்டி வைப்பானாகில் அவன் ஆண்டவனை வெறுத்தவனாவான்; ஆண்டவன் அவனை வெறுக்கிறார்.

3. யாராவது ஒருவன் தானியத்தை வாங்கி ஓர் பட்டணத்துக்குக் கொண்டுபோய் அப்போதுள்ள கிரமமான விலைக்கு விற்பானாகில் அவன் அதை தர்மம் கொடுத்தவன்போல் ஆவான்.

—திருநபியின் திருமொழிகள்

4. (அதிக விலைக்கு விற்க) யாராவது ஒருவன் தானியத்தை நாற்பது நாள் வைப்பானாகில் அவன் மனம் கருத்துப்போகும்.

—ஹஜரத் அலி (ரலி) அவர்கள்

5 யாராவது ஒருவன் தான்யம் கிராக்கியான பிறகு அதிகவிலைக்கு விற்கலாமென்ற எண்ணத்துடன் அதைச் சேர்த்து வைப்பானாகில் அவன் ஆண்டவனுடைய தசூலாவுடைய கோபத்துக்குள்ளாவான்.

—இமாம் கஸ்ஸாலி (ரஹி) அவர்கள்

# காந்திய சோஷலிஸம்.

— K R. பசுபதி —

**பிறந்த** பொன்னாட்டில் இன்று அமைதியின்மை நிலவுகின்றது. தாய்த்திரு நாடு இருநாடாகித் தவிக்கின்றது உலகத்தின் ஒப்பற்ற ஒளி, காந்தி என்ற கலங்கரை விளக்கு இன்று காணவில்லை. உலகை யுத்த மேகங்கள் சூழ்ந்து வருகின்றன. அரசியல் மைதானத்திலே பந்து பலவிதமாக உந்தப் படுகின்றது. எங்கு நோக்கினும், ஜாதி சமயப் பூசலும், வகுப்பு விரோதமும் காந்திய சமதர்மத்தைக் களங்கம் செய்து தலைவிரித்தாடுகின்றன. பல மக்கள் பதவி மோகம் பிடித்தலைகின்றனர். இந்நிலையில் இவற்றிற்கு விமோசனம் எங்கே?

இந்த விடுதலைக் கோயிலே, விமோசன வழியைத் தேடும் மனிதனுக்கு சமதர்மக் குரல் சாந்தியளிக்கின்றது. ஊராருக்கு உழைத்திளைத்து, பஞ்சமராய் பாமரராய், பாட்டாளியாய், உருக்குலைந்து ஓடான தொழிலாளி வர்க்கமும் வரண்ட கட்டாந்தரையிலே, உடைந்த ஏர், கலப்பை வைத்து, செங்குருதி நீர் பாய்ச்சி, பச்சைப் புல் எழுப்பிப் பார்த்து, இறைவனை நினைந்து வாழும் வகையற்ற ஏழையும்; ஆயிரமாயிரமடி சுரங்கத் தொட்டுத் தங்கமெடுத்து பிற பெருஞ் செல்வர்க்களித்து கூலி கிடைக்காது அழும் தொழிலாளரும்; நாட்டிற்கு மக்களுக்கு அகர முதலளித்து, அரியணையில் அமர்த்தித் தாயகத்தாரிடம் கையேந்தி நிற்கும் ஆசிரிய சமுதாயமும்; படித்துப் பட்டம் பெற்று சொந்த தாயை, சொந்த வயிறைக் கார்க்க வேலையின்றி நலிந்து போகும் மாணவ சமுதாயமும் இன்று ஓர் ஐக்கிய முன்னணியில் நிற்கின்றனர். ஓரணியில் சோஷலிஸக் கோட்டையை வலம் வருகின்றனர். தங்கள் வாழ்வு சோஷலிஸ புண்ய பூமியில் என்று உணர்கின்றனர். ஏழ்மை, வறுமை என்பது சமூகத்தின் வியாதி என்பதை உணர்ந்து விட்டனர். முதலாளித்வ நில பிரபுத்வ முறைகள் தங்களின் பயச் சுமையுடன் மலையுச்சியிலிருந்து சடச்சடவென சாய்ந்து உருண்டு கீழே வருவதைக் காண்கின்றனர். சமூகத்தை வர்க்கமாகப் பிரிக்கும் தடைச் சுவரை, பெரும் பழியை பாதாளத்தில் ஆழ்த்த போர்க்கொடியை ஏந்திவிட்டனர் இந்தியர்!

எங்கெங்கு மக்கள் சுரண்டப்படுகின்றார்களோ, எங்கெங்கு ஏழைகள் பெருகுகின்றார்களோ, எங்கெங்கு மனிதன் பனிதனை திருடுகிறானே, எங்கெங்கு நீதி, நியாயம் மறுதளிக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் அதிருப்தியுற்ற, வாழ வழியற்ற, சுரண்டப்பட்ட மக்களின் எதிர்ப்பே, வேலை நிறுத்தங்களாக, புரட்சியாக மாறுகின்றன. அலை மேல் அலையாக எழுகின்றது ஜனப் புரட்சி. அதன் அடித்தலம் காட்டும் வழிதான் இன்றைய சோஷலிஸக் குரல். இந்த சோஷலிஸத்தின் கதை எப்படி, யாரார் சொல்கிறார்கள் பார்ப்போம்.

அன்று சர்வாதிகாரியாக இருந்த ஹிட்லரும், நாசிக் கும்பலும் தங்களை சோஷலின்ட்கள் என்றழைத்துக் கொண்டனர். மாண்டு மறைந்தொழிந்த முசோலினியும் தன்னை சோஷலிஸ்ட் என்று அழைத்துக் கொண்டான். நமது திரு. ஜின்னா, இந்த நாடு இரு கூறாக்கியக் கைங்கர்யம் செய்த புண்ணியாத்மா, கொண்டாடிய நாட்டைத் துண்டாக்கி, மத வேற்றுமை, இன வேற்றுமை என்ற வகுப்புவாத விஷ(ம)த்தை தங்கு தடையில்லாது பாய்ச்சி, பெருங்கலக மெழுப்பி, ஆயிரக்கணக்கான கொலைகளும், கற்பைச் சூறையாடலுமான காரியங்களை நிகழச் செய்ததற்கு காரணமான அந்த காய்தே ஆஜம் இன்று பச்சை ரத்தத்திலே எழுந்த பாகிஸ்தானிலே சோஷலிஸம் நிலவும் என்கின்றார். "ஒரு மனிதன் கோடீஸ்வரனாகவும், மற்றவர் பஸ் கண்டக்டராகவும் இருப்பதை நான் அனுமதிக்க முடியாது" தியாகிகளுக்கு மாத்திரம் என்ன 5 ஏக்கர் ஆளுக்கு 5 ஏக்கர் நிலம் தாருங்கள். இந்த நாட்டில் நிலமற்ற மனிதனே இருத்தல்கூடாது" என்று ஸ்ரீமான் பணக்கார அழகப்பா கூட பேசினார். இம்மாதிரியான நிலைமையில் நேரு ஒரு சோஷலிஸ்டு "என் லட்சியம் சோஷலிஸமே" என்கிறார். அதே சமயத்தில் 'சோஷலிஸத்தின் அதிகாரி' என்று மகாத்மாவினால் அழைக்கப்பட்ட ஜெயப் பிரகாஷ் தேசிய ஸ்தாபனத்திலிருந்து விலகி நின்று சோஷலிஸத்துக்கு செல்வாக்கு தேட புறப்பட்டுவிட்டார். இந்த வேளையில் காந்திய சோஷலிஸம் என்று ஒன்று தோன்றியுள்ளது. இதைப் பொறுத்தவரையில் ஸ்ரீ ஜெயப்பிரகாஷை கேட்ட பொழுது "எங்கள் சோஷலிஸத்துக்கும், காந்திய சோஷலிஸத்துக்கும் பெயரளவில்தான் வித்யாசம் பாக்கி எல்லாம் ஒன்றே என்று சொல்லிவிட்டார். ஆனால் உள்ளது என்ன?

ஸ்ரீ ஜெயப் பிரகாஷ் சொல்லும் சோஷலிஸத்தில் சட்டம் ஜனநாயகத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால்

காந்தீய சோஷலிஸம் மனித இதயத்தை மாற்றி உள்ளத்திலிருந்து வரச் செய்கின்றது ஜனநாயகத்தை. உள்ளத்திலிருந்து உதிக்கும் ஜனநாயகம் நிலைக்கும். சட்ட ரீதியில் எழும் ஜனநாயகம் பின்னால் கண்டிப்பாய் சர்வாதிகார ஜனநாயகமாக மாறிவிடும். சட்டம் அடக்கியாளுமே தவிர அன்பையும், அஹிம்சையும் சிருஷ்டி செய்ய முடியாது. இதை விளக்க ஜனநாயக சோஷலிஷம் சென்ற முடிவைக் காட்ட சரித்திர ஆதாரம் ஒன்றைக் காட்டுவோம்.

பிரெஞ்சிலே ஒரு மாபெரும் புரட்சி நடைபெறப்போகும் சமயம்; முடியாட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க மக்கள் குமுறிய சமயம்; நாட்டில் குமுறிய உள்ளங்கள் எரிமலையென ஒரு நாள் வெடித்தது. "சுதந்திரத்வம், சகோதரத்வம், சமத்வம்" என்ற சோஷலிஸ கோஷங்கள் விண்ணை முட்டியது. வாள் கொண்டு போராடிய பல்லாயிரவரை கொன்று குவித்து, மன்னனின் மணி மகுடத்தை மண்ணிலே புரளச் செய்து தலையை ரத்த தடாகத்தே மிதக்க விட்டனர். புரட்சி ஓய்ந்தது. பலரக முறையில் அரசியல் நடத்தினர். ஐரோப்பா நிலை கலங்கியது. பிரான்ஸின் நிலை மங்கியது. 'சுதந்திரத்வம், சகோதரத்வம், சமத்வம்'' இவற்றைக் காக்க நெப்போலியன் போனபார்ட் தோன்றினன். நாட்டை பகைவரிடமிருந்து காத்தான். ஆனல் மேற்கூறிய கொள்கைகள் நெபோலியனின் சர்வாதிகாரத்தின்கீழ் அடங்கிவிட்டது. அந்த கோஷம் உண்மையின் உருவம். ஆனல் அதையடக்க சர்வாதிகாரம் தோன்றியது.

ஆகவே சுதந்திரத்வ, சகோதரத்வ, சமத்வ கொள்கைகள் உண்மை ஜனநாயகத்தின் அடிப்படையான கொள்கைகள். அஹிம்சையும் அறமும் உள்ளவர்களால்தான் அதைப் பெறமுடியும். வெறும் புரட்சி கோஷமும், சோஷலிஸத்தைக் கையாள ''பலாத்காரம்'' என்று புரட்சி வீரன் ஜெயப் பிரகாஷ் சொல்வது ஜனநாயக சோஷலிஸம் சர்வாதிகாரமாக மாறி பிரான்ஸின் நிலைக்கு இழுத்துச் செல்லும். ஆனல் வழியில்லையா? என்றல் உண்டு. காந்தியின் நேர் வாரிசான நேருவின் சோஷலிஸமே சரியான வழி காட்டும். இன்று அணு குண்டு மக்களுக்கு, அமெரிக்க டாலர் ஏகாதிபத்ய மக்களுக்கு நேரு விடுத்த வேண்டுகோளைப் பார்த்தால் இந்த நாட்டில் காந்தீய வழிதான் சுபிக்ஷமான சோஷலிஸத்தை நாட்ட முடியும்.

நிற்க, நவகாளியிலே மனிதன் வெறிகொண்டிருந்தபோது, பீகாரிலே படுகொலை நடந்து கொண்டிருந்தபோது, தன்னந் தனியாகச் சென்று, எந்த வழியைத் துணையாகக் கொண்டு, அமைதியாக கலங்காது நின்று, ஜனப் சுஹ்ரவர்த்தி அஞ்சியும், அஹிம்சையை ஆண்டவனைப் பற்றி அற்புதமான அமைதிப் புரட்சியைச் செய்ததை, சட்டபூர்வமான சோஷலிஸம் சாதிக்க முடியாது. மேலும் நாடு இரு நாடாகுமுன் படுகொலைகள் நிகழாவண்ணம் தடுத்து, உருப்படியான அமைதி ஏற்படுத்த, மிகுந்த செல்வாக்குடைய சோஷலிஸ்டுகள் ஏன் இரத்தம் சிந்தாத புரட்சியை செய்யவில்லை? மேலும் சோஷலிஸ்டுகள் ''நேருவின் அயல்நாட்டுக் கொள்கை சரி. ஆனல் உள்நாட்டுக் கொள்கை தவறு'' என்கிறார்களே! ஏன்? அப்படி ஒத்துப்போக முடியாத தவரு; நேருவே சமீபத்தில் சொன்னர் ''சர்க்காரில் பதவி வகிக்கும், சுதந்திரத்துக்காகப் போராட்டத்தில் கலக்காதவர்களையும், விரோதிகளையும் பற்றி 'துரதிஷ்டமான தவறுகள்' என்று. இங்கிலையில் சோஷலிஷ்டுகள் நேருவுக்குப் பூரண ஆதரவு காட்டியிருக்க வேண்டும். ஆனல் உள் கொள்கையிலே எதிர்த்திருப்பது யாது நீதி? சரி. செல்பவர் செல்லட்டும்.

சோஷலிஸத்தில், உண்மையான சோஷலிஸத்தில் சம்பள வித்தியாசம் இருத்தல்கூடாது. தோட்டியும், வக்கீலும், பிறரும் ஒரே விதமான, சமமான சம்பளம் பெறவேண்டும். இதுவே காந்தீய சோஷலிஸம். இதை காந்தியே சொல்லியிருக்கின்றார். ஆனல் ஸ்ரீ ஜெயப்பிரகாஷோ சம்பளம் நிர்ணயம் செய்கிறார். சம்பளம் குறைந்த பக்ஷ, உயர்வு பக்ஷத்தை நிர்ணயிக்கும் போது சமத்துவம் எப்படி நிலவும்? என்ற சந்தேகம் எழுகின்றதல்லவா?

இந்த பரந்த பாரத பூமியிலே நடக்கும் சூழல்களுக்கும், தனி மனிதன் அங்குலக் கணக்கிலே தங்கப் பணத்தை அடுக்கி அடிக்கணக்கிலே உயர்த்தி, பொருளாதார அடிமைத் தனத்தை அமைதியான, வேகமான முறையில் ஆழக் குழித்தோண்டிப் புதைக்க காந்தியின் அஹிம்சை முறைதான் பேருதவியளிக்கும் எல்லோரும் இன்புற்றுவாழ குருதி சிந்தா புரட்சியை செய்யும் வழி காந்தீய சோஷலிஸமே! வர்க்கப் பேதங்களும், 5000 ஜாதி, உட்பிரிவினங்களும், முதலாளித்வ தொழிலாளப் போராட்டங்களையும், அமைதியான முறையில் தீர்க்கும் தன்மை வாய்ந்தது காந்தீய வழி. உலகில் வாளேந்தி சோஷலிஸத்தை நாட்ட விரும்பிய நாடுகள் கவிழ்ந்து விட்டன. உள்நாட்டின் கெடுதலைத்தீர்த்து, தாய்நாட்டின் விடுதலைக்கு, பெரிய வல்லரசான பிரிட்டனை, பணிய வைத்தது காந்தீயமல்லவா? இது நமக்கு அனுபவம் உள்ள பொருத்தமான வழி. அத்தன்மை உள்ளது. சட்டம் விரிந்த இதயத்தை தராது. நிவாரணத்தை பூர்ணமாக ஒழிக்க

## ஆஸாத் சங்கம், தென்காசி

4—4—48 அன்று சங்க காரியாலயத்தில் ஜனுப் A M. அப்துல் பாசித் சாஹிப் தலைமையில் நடை பெற்ற நிர்வாகக் கமிட்டி கூட்டத்தில் அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேறின.

1. உலக ஜோதி மகாத்மாஜி காலஞ்சென்றது குறித்து மனப்பூர்வமான வருத்தத்தையும், அநு தாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னு ரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தித்துக் கொண்டு காந்திஜீயின் லக்ஷியங்களை நிறைவேற்றி வைக்கும்படி மகாஜனங்களை இக் கூட்டம் வேண்டிக் கொள்கிறது.

2 ஹைதராபாத் முஸ்லிம்களையும், நிஜாம் அவர் களையும் இந்திய யூனியனுடன் சேரும்படி வேண்டிக் கொள்வதுடன் இதிஹாதுல் முஸ்லிமின் அட்டூழியங் களை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

3. பாலஸ்தீன பிரிவினைத் திட்டத்தை வன்மை யாகக் கண்டிப்பதோடு, ஐரோப்பிய, அமெரிக்க, ஏகாதிபத்திய சக்திகள் ஆசியாவை நாசம் செய்யும் முயற்சிகளிலிருந்து ஆசியா கண்டத்தை காப்பாற்ற ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் உடனே பாலஸ்தீன பிரி வினை திட்டத்தை கைவிடும்படி இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

4. நமது நாட்டிற்கு வேண்டிய உணவு, உடை, இதர சாதனங்கள் முதலியவைகளை உற்பத்தி செய்வதும், பெருக்குவதும் அவசியமாதலால் தொழில் ஸ்தாபனங்களும், ஊழியர்களும் வேலை நிறுத்தங்களில் ஈடுபடாதிருக்க தொழிலாளர்களையும், ஊழியர்களையும் இக்கூட்டம் வேண்டிக் கொள்கிறது

பி. எம். அப்துல் சலாம்,
காரியதரிசி.

ஃ ஃ ஃ ஃ

## கல்லல்

பிர்க்கா காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் கூட் டத்தில் அமரர் காந்திஜீயின் ஞாபகச் சின்னம் நிர்மா ணிப்பதென்றும் சுற்றுப்புறங்களில் பரவி வரும் தொத்து நோயை தடுக்கத் தக்க நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டியதன் அவசி யத்தை வற்புறுத்தியும், மீண்டும் ஸ்ரீ ராமசாமி ரெட்டி யாரே கட்சித் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் குறித்து சந்தோஷத்தை தெரிவித்தும், A. சூப்பன்தார் களுக்குமட்டும் உணவு தான்யம் கிடைக்க செய்யப் பட்டிருக்கும் வசதியை விஸ்தரித்து வினைச்சலின்மை யால் கஷ்டப்படும் விவசாயிகளுக்கும் உணவு தான் யம் கிடைக்கும்படிச் செய்ய வேண்டுமென்று சர்க் காரை வேண்டிக் கொண்டும் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டது.

K. சொக்கலிங்கம்,
காரியதரிசி.

---

முடியாது. ஆனல் சரியான பொருளாதார வினியோ கம் ஏற்பட, உழுபவனுக்கு உண்மையாகவே நிலம் சொந்தமாக, காந்தீயத்தைத் தவிர வேறு சிறிய, சரியான வழி இல்லை.

எல்லோரும் இன்புற்றிருக்க வாழ்வது, வாழ விடு விடுவது காந்திய சமதர்மம். வள்ளுவர் விரும்பிய "உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும் சோரா தியல்வதே நாடு" என்ற குறளின் குறள் வடிவமே காந்திய சோஷலிஸம் இந்த சோஷலிஸம் நம் நாட்டி லேயே நின்று நிலவினல் போதாது. அது பூர்த்தி யான சமதர்மமல்ல உலகம் பூராவும் நிலவவேணும் ஒரே உலகம், ஒரே ஆன்ம நேய உணர்ச்சி இவை ஏற்படுவதுதான் காந்திய சோஷலிஸம் செய்யும் அற் புதம். வடலூர் வள்ளல் மொழிந்ததும் உலக ஒருமை யை ஜாதி, நிற, சமய, நிலை வேறுபாடற்ற சமுதாயத் தையே. இதையே "ஒத்தாரும், உயர்ந்தாரும், தாழ்ந் தாரும், எவரும் ஒருமையுளாகி உலகியல் நடத்த வேண்டும்" என்றார் ராமலிங்க ஜோதி. உலகம் பூரா வும் சமதர்மம் நிலைக்க வேண்டும். அப்பொழுதுதான் உலக சமாதானம் நிலைக்கும். இது இல்லையேல் சோஷ லிஸம் நிலைக்காது பிறழும். இந்த மாதிரி அவலநிலைமை யைத் தடுக்க அண்ணலின் முறையின்றி வேறு இல்லை.

இந்த சோஷலிஸத்தின், காந்தீயத்தின் தன் மையை அமரகவி பாரதி அத்தன்மையின் உண் மையை வரிவடிவத்தில் கீழ் வருமாறு பாடியுள்ளார்.

"காக்கை குருவி எங்கள் ஜாதி, நீளும் கடலும், மலையும் எங்கள் கூட்டம்." இதைத் தவிர வேறு எது பூரணமான சோஷலிஸத்தை ஸ்தாபிக்க முடியும்? வாழ்க அமரகவி. தமிழகப் பெருமக்களே! சோஷ லிஸக் கோவிலை வலம் வருவோம் வாரீர்! அதோ! காந்திய வழி சகல இடையூறுகளையும் அழிக்க வழி காட்டி நிற்கின்றது. சோஷலிஸம் புனிதமானது அந்த லட்சியம் சித்தியாக புனிதமான வழியை, காந் தீயப் பாதை, அன்பு, அறிவு அற வழியை பின்பற்று வோமாக! வாழிய தேசம்! வாழிய வையம்.

ஜெய் ஹிந்த்!

சென்ற வாரத் தொடர்ச்சி.

# பாகிஸ்தான் டைரி

ஓர் மாதம் கூட சரியாக ஆகாது. அதற்குள் மாஜிஸ்டிரேட் வந்து உடனே வீடு காலி செய்ய சொல்லுவார். விஷயம் என்னவென்று கேட்டால் என்னைப்போல் ஓர் சிப்பந்தி நின்று கொண்டிருப்பார். அவர் சொல்லுவார், நான் மாஜிஸ்டிரேட்டிடம் ரூ. 100 கொடுத்திருக்கிறேன், என்று. அந்த ரூ. 100-ஐ அடைந்ததால் இப்போது அவர் அந்த சிப்பந்திக்கு வீடு கொடுக்க வேண்டுமல்லவா? ஆதலால் என்னைப் போல் ஏழை ஆசாமிகள்தானே கிடைப்பர். நம்மை வந்து வீடு காலி செய்ய வேண்டும் என்பார். அப்போது நாம் ஒன்றும் பேசக்கூடாது. பேசி விட்டாலோ நம்மிடம் இருக்கும் படுக்கையும், பெட்டியும் வெளியே சென்றுவிடும். அவருடைய சப்ராஸியின் வலது கை நம் கழுத்தின் மீது இருக்கும். எதற்காக? கல்தா கொடுப்பதற்காக.

இவ்வாறே லஞ்சம் அதிகமாக அதிகமாக நம்மைப் போலுள்ள ஏழைகளின் கதி அதோகதிதான்

இது நம் திருச்சியிலிருக்கும் முஸ்லிம் தோழர்களிடம் கூறினல் 'நீர் ஏன் அங்கு சென்றீர்' என்று நம்மைக் கேட்கின்றனர். 'உன்னை யார் அழைத்தனர்' என்று கொழும்புவிலிருந்து வரும் 'இஸ்லாமிய தாரகைக்' கேட்கின்றது.

நான் அந்த இஸ்லாமிய தாரகை'யை கேட்கின்றேன். பாகிஸ்தான் என்றும் ஹிந்துஸ்தான் என்றும் பிரிந்ததற்குப் பிறகு என்னைப் போன்ற உத்தியோகஸ்தர்களை எங்கு சேவை செய்கின்றுய் என்று கேட்டதின் மர்மம் என்னவென்று? மைனரிடிகளை காப்பாற்ற என்பது உண்மைதானே. நாம் அங்கு சென்றதில் தப்பிதம் என்ன? சென்ற பிறகு கண்டதென்ன! ஏமாற்றம் மைனரிடிகளை காப்பாற்ற அல்ல. மைனரிடிகளை நசுக்க.

என் அருமைத் தோழர்களே இன்னும் கேட்கின்றனர். நீ ஹிந்துஸ்தானிலிருந்துகொண்டே பாகிஸ்தானிற்கு சேவை செய் என்று. இதனல் அவர்களுடைய புத்தியின்மையை பாருங்கள். இருக்க வேண்டியது ஹிந்துஸ்தானிலாம் சேவை செய்ய வேண்டியது பாகிஸ்தானிற்காம். ஏன்? 5-ம் படையினராக வேலை செய்ய வேண்டுமாம். தேசத் துரோகம் செய்ய வேண்டுமாம்.

என்னைப் போல் ஏழைகள் சென்றதற்கு பலவிதமாக கேலி செய்கின்றனர். ஜனப் ஜின்ன சாஹிப் பம்பாயைவிட்டு சென்றுவிட்டாரே! அதற்கு என்ன பதில்? ஏன்? ஜின்ன சாஹிபுக்கு மாத்திரம் கொம்பா முளைத்திருக்கிறது. அப்படி ஒன்றும் இல்லையே. அவர் ஹிந்துஸ்தானிலிருந்து கொண்டே ஹிந்துஸ்தானில் வாழும் முஸ்லிம் மைனரிடிகளைக் காப்பாற்றியிருக்கலாமே. கவர்னர் ஜெனரல் என்றவுடன் பதவி ஆசையோ? ஓர் வேளை இருக்கலாம். அல்லது ஹிந்துஸ்தானில் அவருடைய பாச்சா இனிப் பலிக்காது என்ரு? அதுவும் இருக்கலாம்.

பஞ்சாபில் (Cost of living) வாழ்க்கை நடத்தும் செலவுகளைப்பற்றி எழுதினலோ, அப்பப்பா எழுதவே முடியாது. நம்மைப் போன்ற ஏழை அகதிகளுக்கு ஓர் தனி விலை. அதாவது இரட்டிப்பு. முதலில் அங்கு ஒன்றும் கிடைப்பதில்லை. (கோதுமை, அரிசியைத் தவிர) இரண்டாவது கருப்பு மார்க்கெட் சிவகாசி எங்கிருக்கின்றது. லாகூர் எங்கிருக்கின்றது. சிவகாசியில் செய்யப்படும் ஓர் நெருப்புப் பெட்டி லாகூரில் 2 அணவிற்கு விற்கப்படுகின்றன. ஆனல் அதற்குக் கண்ட்ரோல் விலை ஒரு அணதான். இதை பகிரங்கமாக 2 அண என்று "அனர் கலி" (பெரிய பஜாரில்) யில் விற்கின்றனர். (Players) பிளேயர்ஸ் சிகரெட் பாக்கெட் ஒன்றிற்கு ரூ. 1—2—0. பிறகு சாப்பாடு கிடைப்பது அரிது. கிடைக்கக்கூடியது என்னவென்ருல் ரொட்டியும் மாமிசமும் தான். அதுவும் மாட்டு மாமிசம். 2 ரொட்டிகள், 1 பிளேட் சால்ன 1 டீ குடித்து எவ்வளவு என்று கணக்குக் கேட்டால் ரூ. 1-10-0 என்பான். ஒன்றும் பேசாமல் அதைக் கொடுத்துவிட வேண்டும். மாதத்திற்கு என்ன ஆகின்றது. கொஞ்சம் பாருங்கள் சகோதரர்களே. என்னைப்போல் ஏழை அங்கு வாழ முடியுமா என்று.

லாகூரில் அதுவும் டவுனில் ஓர் ஹிந்துவோ, அல்லது ஓர் சீக்கியனே மருந்துக்கும் கிடையாது. இதை எவராலும் மறுக்கமுடியாது.

படிப்பு விஷயமோ சொல்ல முடியாது என்னுடைய ஸூபர்வைசர் (Supervisor) என்னை எங்கிருந்து வந்தாய் என்று கேட்டார். மதருஸ் மாகாணத்திலிருந்து என்றேன். அதற்கு அவர் (ரூ. 250

சம்பளம் வாங்கக் கூடிய ஆபீஸர்) மதராஸ் மாகாணம் பாகிஸ்தானில் சேர்ந்துள்ளதா என்றார். எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. என்ன சொல்ல வேண்டுமென்றே தெரியவில்லை. நான் அங்கு புதியவன். ஆதலால் மற்றொன்றும் பேசாமல் அது ஹிந்துஸ்தானில் உள்ளது என்றேன்.

மற்றொரு சமயம் என் சிநேகிதருடன் இம்பீரியல் பாங்குக்கு சென்றிருந்தேன். அங்கு என் சிநேகிதர் ஆங்கிலத்தில் ஏதோ கேட்டார். ஏனெனில் பஞ்சாபில் பேசப்படும் பாஷையானது முக்கால் பங்கு பஞ்சாபி சேர்ந்த உர்து ஆகும். அது நமக்கு சரியாக விளங்காது. அதற்கு அந்த குமாஸ்தா நேரிடையாக தமக்கு ஆங்கிலம் சரியாகத் தெரியாது உர்துவில் பேசுங்கள் என்றான். அதற்கு என் சிநேகிதர் உர்துவில் (கொச்சையல்ல இலக்கணந்தான்) பேசினார். அதற்கு அவன் பஞ்சாபியில் விளங்கவில்லை என்று கூறினான்.

இது இங்கு கூறக் காரணம் என்னவென்று கேட்டால் ஜின்னா சாயபு இஸ்லாமிய மதம், பாஷை, எல்லாம் ஒன்று என்றார். இதை நாம் நம்பினோம். அங்கு போய் பார்த்தால் பஞ்சாபில் பஞ்சாப் பாஷை வேண்டும் என்கின்றனர். சிந்துவில் சிந்தி பாஷை எல்லை மாகாணத்தில் புஸ்து பாஷை, கிழக்கு வங்காளத்தில் வங்காளம் வேண்டும் என்கின்றனர். இப்போது பாஷை ஒன்று என்று கூறிய ஜின்னா, வாய் மூடிக்கொண்டிருக்கின்றார்.

பஞ்சாப் அசெம்பளியில் மாகாண பாஷை உர்து ஆக்க வேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானத்தில் கலாட்டா நடந்தது நேயர்களுக்கு ஞாபகம் இருக்கும். பஞ்சாபிகளுக்கு உர்து தெரியாது என்று நான் மட்டும் கூறவில்லை லாகூரிலிருந்து வெளிவரும் "அககார்" என்னும் வாரப் பத்திரிகை எழுதுகின்றதே. அதற்கு என்ன கூறுகின்றீர்கள் தோழர்களே.

மக்களுடைய குணமோ, முதல்தர முரட்டு சுபாவம். உதாரணமாக பக்ரீத் பண்டிகையன்று இரவு முஸ்லிம்களாக மாறின (Converted) இரு சீக்கியர்கள் நான் இருந்த கேம்பிற்கு பின்னால் கழுத்தை அறுத்துப் பிரேதங்களை ரோட்டின் ஓரத்தில் போட்டு விட்டனர் காலையில் ஜனங்கள் நடமாடினர். போலீஸ் சிப்பந்திகளும் சென்றனர். ஒருவரும் அந்த பிரேதங்களைப்பற்றி சரியாக விசாரிக்கவில்லை. விசாரித்தனர். அந்த பிணம் முஸ்லிமா அல்லது முஸ்லிம் அல்லாதாருடைய பிணமா என்று போதும்! முஸ்லிம் அல்லாதார் என்று சொன்னவுடன் "குப்பார் மர் கயா" என்று சொல்லிவிட்டுச் சென்றுவிடுகின்றனர்.

இதற்கு சில நாட்களுக்குப் பிறகு ஓர் முஸ்லிமைக் கொன்று பிரேதத்தை என் ஆபீஸ் காம்பவுண்டிற்குள் போட்டிருந்தனர். இத்தனைக்கும் என் ஆபீஸின் நாற்புறமும் இரவும் பகலும் போலீஸ் பாரா உண்டு. அடுத்த நாட் காலையில் சூப்பிரண்டெண்டெண்ட் போலீஸை வரவழைத்து அந்த பிரேதத்தை வெளியேற்றினர். போலீஸ் வருவதற்கு முன் அந்த பிரேதத்தின் மகன் வந்து பார்த்தான், பார்த்து நானும் ஒரு முஸ்லிம். என் தகப்பனும் ஓர் முஸ்லிம். இதுதானா பாகிஸ்தான். பாகிஸ்தானில் முஸ்லிமை முஸ்லிம் கொல்லும் காலம் வந்துவிட்டதா என்று அலறினான் அதைப் பார்த்திருந்தால் இங்கிருந்து கொண்டு ஜம்பமாகப் பேசும் தோழர்களுக்கு அவ்வாறு பேச நாக்கு எழும்பாதப்பனே.

மற்றொரு உதாரணம் பாரப்பா. இது நான் இருந்த வீட்டில் நடந்தது. நான் ஷௌதி கடி (Shaudhi Ghadi) என்னும் இடத்தில் மற்றும் 3 தோழர்களுடன் மேல் மாடியில் வசித்து வந்தேன். ஓர் நாள் மாடியின் படியில் என் தோழர்களில் ஒருவர் கூட்டிக் கொண்டிருந்தார். அப்போது தூசி கிளம்பிற்று போலும். அதற்கு அருகிலிருந்த போலீஸ்காரன் பஞ்சாபியில் ஏதோ சொல்லியிருக்கிறான். அது என் சிநேகிதருக்குப் புரியவில்லை. அதற்குள் அந்த போலீஸ்காரன் கையும் துப்பாக்கியுமாக வந்து அந்த சிநேகிதரின் மீது குறிபார்த்தான். அதற்குள் சிநேகிதர் அந்த போலீஸ்காரனைப் பார்த்ததும் உள்ளே ஓடி வந்து விட்டார் விஷயம் என்னவென்று கேட்க, அவர் முழுவதும் கூறினார். பிறகு நான் பயந்து கொண்டே கீழே இறங்கிச் சென்று சமாதானம் சொல்லி அனுப்பினேன். ஏது? இரண்டு அல்லது மூன்று நிமிஷங்களில் என் சிநேகிதர் அவனைப் பார்க்காமல் நின்றிருந்தால் கொன்று விட்டிருப்பான் போலும்!

தோழர்களே! என் சிநேகிதரின் குற்றம் என்ன? அதற்கு கொடுக்கவிருந்த தண்டனை என்ன? இது ஓர் புத்தியுள்ள மனிதனின் செய்கையா? அல்லது ஒரு பைத்தியக்காரன் செய்கையா என்றுதான் கேட்கிறேன். இது அல்பமான காரியம் என்று தள்ளி விடாதீர்கள். இது பஞ்சாப் மக்களின் அறிவின்மையை குறிக்கின்றதல்லவா!

பாகிஸ்தான் ஒரு இஸ்லாமிய நாடு என்று சொல்லுகின்றனர். மேற்குப் பஞ்சாபின் தலை நகரான லாகூரில் தாஸிகள் இருக்கின்றார்கள். அதுவும் முஸ்லிம் தாஸிகள். மாலை 6 மணியானவுடன் 'மேக் அப்' செய்து கொண்டு "ஹீரா மண்டி" யில் (அவர்

களுடைய ஹெட் குவார்டர்) மாடிகளின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கின்றனரே! இது தான் இஸ்லாமிய நாடா? இவர்களை விரட்டக் கூடிய தைரியம் கூட பாகிஸ்தான் அரசாங்கத்திற்கில்லையா? இல்லை. ஏன்? இவர்கள் அங்கு இல்லாவிட்டால் தர்பார் நடத்த முடியாதல்லவா.

லாகிரி வஸ்துக்களைப்பற்றி கேட்டாலோ 100க்கு 75 பேர் அவ்வஸ்துக்களை உபயோகிக்கின்றனர். லாகூரில் உள்ள "லண்டே பஜாருக்கு" சென்று விட்டால் அபினி கடைகளும், கஞ்சா கடைகளும் சுமார் 200 க்கு மேல் இருப்பதைக் காணலாம். கள், சாராயம் அங்கு கிடையாது. ஆனால் அந்நிய நாட்டு பானங்களான பீர், விஸ்கி, பிராந்தியை ஒவ்வொரு மனிதனும் உபயோகிக்கின்றனர். குரானில் எது வெல்லாம் பாபம் என்று சொல்லப்பட்டிருக்கின்றதோ அவை யெல்லாம் பாகிஸ்தானில் நடனமாடுவதைப் பார்க்கலாம்.

அங்குள்ள மக்கள் கொலை செய்வதற்கோ அஞ்சவில்லை தலை வேறு முண்டம் வேறாக செய்து விடுகின்றனர்.

இது போன்ற இன்னும் அநேக கொடூரமான, தவறான, நியாயமற்ற விஷயங்கள் பாகிஸ்தானில் உள்ளன. இந்திய டொமினியனிலுள்ள பாமர முஸ்லிம்களை தவறான நம்பிக்கையில் வைத்துக் கொண்டிருக்க பாகிஸ்தான் தலைவர்கள் முயற்சித்து வருகின்றனர். பாகிஸ்தான் வாங்கியாய்விட்டது. இனியும் இல்லாததையெல்லாம் சொல்லி பாகிஸ்தான் வண்டவாளத்தை உள்ளது உள்ளபடியே முஸ்லிம்கள் அறியாதபடி செய்வதைக் கண்டிக்காமல் இருக்க முடியாது. இஸ்லாமிய நாடு என்று சொல்லப்படும் பாகிஸ்தான் லட்சணத்தை இன்று அநேக முஸ்லிம்கள் உணர்ந்துவிட்டனர் இன்னும் நாட்கள் செல்லச் செல்ல எல்லோரும் அறிந்து கொள்வீர்களாக!

— S. R. பாஷா, —
(பாகிஸ்தான் சென்று திரும்பி வந்தவர்.)

உங்கள் வியாபாரம் விருத்தியடைய
ஆஸாதில்
விளம்பரம் செய்யுங்கள்.

## காரைக்குடி

நேத்தாஜி சிறுவர் சங்க ஆரம்பவிழா செட்டியார் நிலவுரிமை சங்கத்தில் டாக்டர் V. S. S. மணி தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர்கள் M. நாராயணசாமி, T. S. ராஜகோபாலனும், திரு. பழ ராமசாமி முதலியோரும் பேசினார்கள். தேசத்தைக் காப்பதில் வாலிபர்கள் நேதாஜியைப்போல் ஆர்வமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென தலைவர் கேட்டுக் கொண்டார். காரியதரிசியின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

## முறையூரில் ஹரிஜன ஆலயப்பிரவேசம்

24—3—48 காலை சிவகெங்கை ஜமீனைச் சேர்ந்த சிவன் கோவிலில் காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் திருப்பத்தூர் ஸ்ரீ K. கிட்டுவையா தலைமையில் ஹரிஜன ஆலயப் பிரவேசம் நடந்தது. திரளான ஒதுக்கப்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். ஸ்ரீ சா. அ. அண்ணாமலை செட்டியார் வீட்டில் சுமார் 1500 ஜனங்களுக்கு ஹரிஜனங்களோடு மற்றும் எல்லோரையும் சமமாக அனுமதித்து சம பந்தி போஜனம் நடந்தது. அன்று மாலை சத்துரு சம்ஹாரக் கோட்டை திரு. S. முத்து அவர்களால் அழைத்து வரப்பட்ட ஹரிஜனங்கள் வந்து பிரஸ்தாப சிவன் கோவிலினுள் சென்று தெரிசனம் செய்தார்கள். அண்ணல் காந்திஜீ வெள்ளிக்கிழமை இறந்ததால் பிரதி வெள்ளிக்கிழமையும் அவரது தத்துவங்களை பரப்புவதற்கு காந்தி வாசகசாலையில் பஜனை சமாஜம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காரியதரிசி,
முறையூர் கிராம காங்கிரஸ் சபை.

காந்திய வழி சிறுவர் கல்லூரி ஆதாரக் கல்வி அடிப்படையில் 50 மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது. இன்னும் ஏராளமான மாணவ மாணவிகளுக்கு இடவசதி செய்து கொடுக்க முடியாதிருந்ததை உணர்ந்த பலர் உதவி புரிந்ததின் பலனாக கட்டிட வேலைகள் நடந்து வருகின்றது. 15—4—48ல் சென்னை மாகாண மந்திரிகள் கனம் கூர்மையா காரு, கனம் மாதவ மேனன் திறப்பு விழாவை நடத்துவார்கள்.

நாட்டிற்கு இன்னும் சிறந்த வகையில் பணியாற்ற நிரம்ப பொருள் தேவை. கல்லூரி வளர்ச்சியிலும், ஹரிஜன முன்னேற்றத்திலும் அக்கறை காட்டுவோர் ஒவ்வொருவரும் பொருளுதவி செய்வது கடமையெனக் கருதி உதவ வேண்டுகிறேன். பொருளுதவி செய்வோர், ஸ்ரீ முத்து சுப்பையா :- நிர்வாகி, காந்திய வழி சிறுவர்கல்லூரி, பொம்மனப்புரம், அரிமழம் போஸ்ட், புதுக்கோட்டை என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, E Kadalangudi St, Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.